## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம் (திருத்தச்) சட்டம்

---

*[1988, ஜூலை மாதம் 27 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, யூலை மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம் (திருத்தச்) சட்டம்

[1988, ஜூலை மாதம் 27 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 42/86
1877

**1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) பல்கலைக்கழகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது (இதனகத்துப்பின்னர் "கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம்" என்றழைக்கப்படுதல் வேண்டும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அஅ) பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமை தொடர்பிலான கல்விக் கிளைகளில் கற்கை நெறிகளுக்கும், போதனைக்கும் ஏற்பாடு செய்தல் :

(அஆ) அத்தகைய கற்கை நெறிகளையும் போதனைகளையும் பின்பற்றுவதற்கு அலுவலர் பயிலிளவல்களையும் அலுவலர்களையும்அனுமதித்தல் ;

(அஇ) அத்தகைய கல்விக் கிளைகளில் தேர்ச்சிபெற்ற அலுவலர் பயிலிளவல்களையும் அலுவலர்களையும் கண்டறியும் நோக்கத்துக்காக பரீட்சைகளை நடாத்துதல் ;

(அஈ) பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமை தொடர்பிலான கற்கை நெறிகளைப் பின்பற்றுவதற்கு பகிரங்க அலுவலர்களை அனுமதித்தலும் அத்தகைய கற்கைகளில் தேர்ச்சி பெற்ற அலுவலர்களைக் கண்டறியும் நோக்கங்களுக்காக பரீட்சைகளை நடாத்துதலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது அப்பிரிவின் (அ) எனும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (அஅ) அலுவலர் பயிலிளவல்களுக்கும் அலுவலர் பயிற்சிக்கும் இயைபானவையாகக்கூடிய அத்தகைய பாடங்களில் கலைக்கழகக் கற்கைகளுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தலும் அத்தகைய கற்கைகள் பற்றிய போதனைகளை ஏற்பாடு செய்தலும் ;

(அஆ) முன் அலுவலர் பயிலிளவல்களுக்கு ஓர் அடிப்படையான சேவைப் பயிற்சியை ஏற்பாடு செய்தல் ;

(அஇ) பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமை தொடர்பிலான கல்விக் கிளைகளில்கற்கை நெறிகளையும் போதனைகளையும் ஏற்பாடு செய்தல் ;

(அஈ) அத்தகைய கற்கை நெறிகளையும் போதனைகளையும் பின்பற்றுவதற்கு அலுவலர் பயிலிளவல்களையும் அலுவலர்களையும் அனுமதித்தல் ;

(அஉ) அத்தகைய கல்விக் கிளைகளில் தேர்ச்சி பெற்ற அலுவலர் பயிலிளவல்களையும், அலுவலர்களையும் கண்டறியும் நோக்கங்களுக்காக பரீட்சைகளை நடாத்துதல் ;

(அஊ) பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமை தொடர்பிலான கற்கை நெறிகளைப் பின்பற்றுவதற்கு பகிரங்க அலுவலர்களை அனுமதித்தலும், அத்தகைய கற்கைகளில் தேர்ச்சிபெற்ற அலுவலர்களைக் கண்டறியும் நோக்கங்களுக்காகப் பரீட்சைகளை நடாத்துதலும் ;

(அஎ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 128 ஆம் பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், கலைக்கழகத்தில் அத்தகைய கல்விக் கிளைகளில் கற்கை நெறிகளைப் பின்பற்றிஅத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்த அலுவலக பயிலிளவல்களுக்கும், அலுவலர்களுக்கும், பகிரங்க அலுவலர்களுக்கும் பட்டங்களையும், திப்புலோமாக்களையும் சான்றிதழ்களையும் வழங்கி அளித்தலும் ;

(அஏ) முகாமைச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு கௌரவப் பட்டங்களையும் பிற கல்விச் சிறப்புக்களையும் அளித்தல் ;

(அஐ) கலைக் கழகத்தின் நோக்கங்களுக்காக நூலகங்கள், ஆய்வு கூடங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றினை அமைத்தலும் அவற்றிற்குச் சாதனமிடுதலும் அவற்றைப் பேணிவருதலும் ;

(அஒ) மற்றும் கலைக்கழகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடிய வாறான பேராசிரியர் பதவிகளையும் விரிவுரையாளர் பதவிகளையும் பிற பதவிகளையும் உருவாக்குதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவினை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என மீள இலக்கமிடுவதன் மூலம்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் அதற்கான (அ) எனும் பந்தியினை உடனடுத்து பின்வரும் பந்தியினை இடுவதன் மூலம் :—

"(அஅ) பாதுகாப்பு எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான மேலதிகச் செயலாளர் (இவர் இதனகத்துப்பின்னர் மேலதிகச் செயலாளர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்)";

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் :—

"(2) பாதுகாப்பு எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், சபையின் கூட்டங்களில் தலைமைவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் சமுகமளிக்காதவிடத்து மேலதிகச் செயலாளர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) ஐந்து உறுப்பினர்கள் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண்ணை அமைதல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் ஆகக் குறைந்தது இரு உறுப்பினர்கள் ஆயுதப்படைகளின் எவுநர்களாகவிருத்தலும் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "சபையின் பொதுவான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் பொதுவான பணிப்புகளுக்கும், கட்டுப்பாட்டிற்கும் அத்துடன் 7அ எனும் பிரிவின் ஏற்பாடுகளுக்கும்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.". முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 7அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

"கற்கைகள் சபை

7அ. (1) கல்வி மற்றும் பாதுகாப்புக் கற்கைகள் தொடர்பிலான கலைக்கழகத்தின் அலுவலர்கள், முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்ட கற்கைகள் சபையினது பணிப்பின் கீழ் உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) சபையினது பொதுவான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக கற்கைகள் சபையானது கலைக்கழகத்தினது போதனை நெறிப்படுத்தலுக்கும் கற்கை நெறிகளுக்கும், ஆராய்ச்சிக்கும் பரீட்சைகளுக்கும் பொறுப்பானதாயிருத்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 10அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"கணக்குகளின் கணக்காய்வு

10அ. (1) சபையானது, கலைக்கழகத்தினது வருமான செலவினத்தையும், சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அத்துடன் பிற எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் கொண்ட முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) பகிரங்க கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பினது 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் கலைக்கழகத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது, அப்பிரிவினது (அ), (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருந்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 24அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.

24அ. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கலைக்கழகத்துக்கு அல்லது அது தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ள குறித்த சில சொல்லமைப்புக்களைப் பொருள் கொள்ளுதல்.

11. இச்சட்டத்துக்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிரிவு ஒவ்வொன்றிலும், அத்தகைய அட்டவணையில் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சொல்லமைப்புப் பற்றிய குறிப்பீடு அவ்வட்டவணையின் III ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சொல்லமைப்புப் பற்றிய குறிப்பீடுகள் என வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தையும், பிற எழுத்திலான சட்டங்களையும் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தினது அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினது அல்லது ஏதேனும், எழுத்திலான சட்டத்தினால், அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட, செய்யப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற அறிவித்தல், கடிதத்தொடர்பு, படிவம் அல்லது பிற ஆவணம் எதனினதும் ஏதேனும் ஏற்பாட்டில் "சேர் ஜோன் கொத்தலாவலை" அல்லது "சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம்" எனும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம், அச்

சொற்களுக்குப் பதிலாக முறையே "ஜெனரல் சேர் ஜோன் லயனல் கொத்தலாவல" "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கலைக்கழகம்" எனும் சொற்கள் இடப்படல் வேண்டும்.

13. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கலைக்கழகத்தினால் அல்லது அதன் சார்பில் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது எழுதி நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது எத்தன்மைத்தானதுமான வேறு சாதனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும், அதன்பின்னரும் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கலைக்கழகத்தினால்" அல்லது அதன் சார்பில் ஆக்கப்பட்டதாகவும், வழங்கப்பட்டதாகவும் அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டதாகவும், செய்யப்பட்டிருக்கின்றதாகவும், வழங்கப்பட்டிருக்கின்றதாகவும் அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டிருக்கின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் முதலியவற்றுக்கான பேணல்கள்.

(11 ஆம் பிரிவு)

அட்டவணை

| நிரை I | நிரை II | நிரை III |
|---|---|---|
| முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் | | |
| 3 (அ) | முன் அலுவலர் பயிலிளவல் | அலுவலர் பயிலிளவலும் அலுவலரும் |
| 3 (ஆ) | முன் அலுவலர் பயிலிளவல் | அலுவலர் பயிலிளவல் |
| 3 (இ) | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவலர் பயிலிலவல்கள் |
| 7 (1) | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவலர் பயிலிளவல்களும் அலுவலரும் |
| 14 | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவலர் பயிலிளவல்கள் |
| 15 (2) (ஆ) | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவலர் பயிலிளவல்கள் |
| 15 (2) (ஈ.) | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவலர் பயிலிளவல்கள் |
| 15 (2) (உ) | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவல்கள் பயிலிளவல்கள் |
| 19 (இ) | முன் அலுவலர் பயிலிளவல்கள் | அலுவலர் பயிலிளவல்களும் அலுவலர்களும் |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.